மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு முறையை நடைமுறைப்படுத்துவது இயலாத காரியம். ஒரு இயந்திரத்தினுடைய விலையைவிட அவர்கள் வந்துபோகிற செலவு அதிகமாகும். இங்கேயே அதிலே பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இணைப்புக் கருவிகள், மாற்றுக் கருவிகள் உடனடியாகக் கிடைப்பதிலே சில நேரத்திலே தடை ஏற்படுகிறது. காரணம் மேல்நாட்டாரின் விஞ்ஞான வளர்ச்சி காரணமாக ஐந்து ஆண்டுகளுக்கு, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை 'model of the machines' மாறிக்கொண்டே இருக்கிறது. ஆகவே அதிலே பொருத்தப்படவேண்டிய 'ஸ்பேர் பார்ட்ஸ்' எளிதாகக் கிடைப்பதில்லை. இன்னும் சொல்லப்போனால், சில நேரங்களிலே பழுது பார்த்ததற்குப் பின்னால், மறுபடியும், தாங்கும் சக்தி குறைவு காரணமாக, அடுத்த ஒரு வாரத்திற்குள்ளாகப் பழுதுபட்டுவிடுகிறது. இந்தச் சிக்கல் இனி விரைவில் நுட்ப அறிவு வளர்ச்சி காரணமாக தீர்க்கப்படும் என்று எதிர் பார்க்கிறேன்.

Motor Car Accident Cases

* 218 *Q.*—THIRU M. ARUMUGASWAMI (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that in some districts, especially in Madurai district, motor car accident cases are pending for more than four years; and

(*b*) if so, whether there is any proposal to set up a separate Motor Car Accident Claims Tribunal at Madurai to dispose of the cases expeditiously?

மோட்டார் வாகன விபத்து வழக்குகள்.

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மோட்டார் கார் விபத்து வழக்குகள் சில மாவட்டங்களில், குறிப்பாக, மதுரை மாவட்டத்தில் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக முடிவு செய்யப்படாமலுள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இந்த வழக்குகளை விரைவில் முடிவு செய்வதற்கு மதுரையில், மோட்டார் கார் விபத்து இழப்பீட்டு உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றம் ஒன்றைத் தனியே அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

1974 மார்ச் 26]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம். மோட்டார் வாகன விபத்து வழக்குகள் நான்கு ஆண்டுகளுக்கு மேல் நிலுவையில் இருப்பவை பின்வருமாறு :—

(1) செங்கல்பட்டு	6
(2) தென் ஆற்காடு	27
(3) வட ஆற்காடு	1
(4) திருச்சிராப்பள்ளி	38
(5) மதுரை	3
(6) கன்னியாகுமரி	1
(7) கோயம்புத்தூர்	3

(இ) மதுரைக்குத் தனியாக ஒரு மோட்டார் வாகன விபத்து வழக்கு மன்றம் அமைப்பது பற்றி சென்னை உயர்நீதி மன்றத்துடன் கடிதப் போக்கு வரத்து நடந்து கொண்டிருக்கிறது.

Demand of Exorbitant Taxi Fares by Taximen.

* 219 Q.—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government are aware that some taximen at Madras Airport demand extra payment from passengers over and above the meter charges; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

வாடகை மோட்டார் வண்டிக்காரர்கள் அதிகக் கட்டணம் கோருதல்.

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை விமான நிலையத்தில் வாடகை மோட்டார் வண்டிக் காரர்கள், மீட்டர் கட்டணத்திற்கும் மேலாக அதிகக் கட்டணம் கொடுக்க வேண்டுமென பயணிகளிடம் கேட்கிருர்கள் என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.